தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ்

Tamil Study Centre Homebush Inc

www.tsch.org.au

# Mid Year
# Exam Papers 2008

KG – Year 10

# அரையாண்டு
# பரீட்சைத்தாள்கள் 2008

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

அரையாண்டுப் பரீட்சை பாலர்வகுப்பு கீழ்ப்பிரிவு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி.ப.இராமகிருஷ்ணசுவாமி திகதி:- 14-06-2008

வினா 01: உங்கள் பெயரை எழுதவும்.

பெயர்:

(9 புள்ளிகள்)

வினா 02:
உயிர் எழுத்துக்கள் அனைத்தையும் ஆய்த எழுத்தையும் ஒழுங்காக ஒவ்வொரு அடைப்புக்குள்ளும் எழுதவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

(13 புள்ளிகள்)

வினா 03:
பின்வரும் எழுத்துக்களைப் பார்த்து அதன்படி எழுதவும்

| | | | |
|---|---|---|---|
| க | ங | ச | ஞ |
| | | | |

(8 புள்ளிகள்)

வினா 04:

1 – 10 வரையிலான இலக்கங்களை எழுதவும்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(10 புள்ளிகள்)

வினா 05:

வடிவத்தை உரிய சொல்லுடன் இணைக்கவும்

| | |
|---|---|
|  | நீள்சதுரம் |
|  | முக்கோணம் |
|  | சதுரம் |
|  | வட்டம் |

(20 புள்ளிகள்)

வினா 06:
படத்திற்குரிய சொல்லுடன் இணைக்கவும்

| | |
|---|---|
|  | எலி |
|  | ஓடம் |
|  | ஏர் |
|  | ஒட்டகம் |
|  | ஐவர் |

(25 புள்ளிகள்)

வினா 07: பறவைகளை உரிய சொல்லுடன் இணைக்கவும்

| | |
|---|---|
|  | வாத்து |
|  | புறா |
|  | கொக்கு |

(15 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

அரையாண்டுப் பரீட்சை பாலர்வகுப்பு மேற்பிரிவு

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி க.வடிவேற்பிள்ளை
திருமதி ச.பாலகங்காதரன்

திகதி:- 14-06-2008

பெயர்:-

---

வினா 01: பின்வரும் சொற்களிலுள்ள உயிர் எழுத்துக்களை எழுதுக.

1. அழகு ______________________.
2. ஆடு ______________________.
3. இலை ______________________.
4. ஈட்டி ______________________.
5. உணவு ______________________.

(20 புள்ளிகள்)

வினா 02: எழுத்துக்களை வைத்து சொற்களை உருவாக்குக.

| | | | |
|---|---|---|---|
| ட | ப | ம் | |
| ர | ம | ம் | |
| ணி | ஏ | | |
| டு | ஆ | | |
| ட் | ப | ம் | ட |

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

(20 புள்ளிகள்)

வினா 03: இடைவெளியை நிரப்புக

| | | | | |
|---|---|---|---|---|
| னை | ய | மா | யா | கு |

| | |
|---|---|
|  | _____டு |
|  | மு_____ல் |
|  | ___திரை |
|  | _____னை |
|  | பூ_____. |

(20 புள்ளிகள்)

வினா 04: படத்திற்கு ஏற்ற நிறம் தீட்டுக



வாழைப்பழம்

வானம்





தக்காளிப்பழம்



இலை

காகம்



(20 புள்ளிகள்)

வினா 05: படத்திற்குரிய சொல்லை எழுதுக.

**அப்பா தங்கை அம்மா அண்ணா தம்பி**

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

அரையாண்டுப் பரீட்சை ஆண்டு ஒன்று நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி க.வனதேவா திகதி:- 14-06-2008

பெயர்:-

---

வினா 1: கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஒழுக்கம் உயர்வு தரும்.

ஒ___க்கம் உய___வு த___ம்.

2. ஒற்றுமை பலம் தரும்.

ஒற்___மை ப___ம் ____ரும்.

3. பயமும் மெல்லப் பறந்து சென்றது.

பயமும் ___________ பறந்து சென்றது.

4. பாடமும் படிக்கப் பிடித்து விட்டது.

__________ படிக்கப் ___________ விட்டது.

(20 புள்ளிகள்)

வினா 2: சொற்களைக் கண்டு பிடிக்கவும்




1. …………………………………………………

2. …………………………………………………

3. …………………………………………………

4. …………………………………………………

5. …………………………………………………

6. …………………………………………………

(12 புள்ளிகள்)

வினா 3: பின்வருவனவற்றுள் குடும்ப உறவுச் சொற்களுக்குப் புள்ளடியிடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | மாமா | | 2 | பாமா | |
| 3 | கண்ணா | | 4 | அண்ணா | |
| 5 | தாத்தா | | 6 | தங்கை | |
| 7 | பாமினி | | 8 | பாட்டி | |
| 9 | அப்பா | | 10 | அனு | |

(20 புள்ளிகள்)

வினா 4: வசனமாக ஒழுங்குபடுத்தி எழுதுக.

1. பெயர் / உங்கள் / என்ன

……………………………………………………………

2. பச்சை / நிறம் / இலை

……………………………………………………………

3. பட்டம் / நாங்கள் / விடுவோம்

…………………………………………………………..

4. எங்கள் / வாருங்கள் / வீட்டுக்கு

……………………………………………………………

5. ஆடுகிறாள் / மாலா / நடனம்

……………………………………………………………

(10 புள்ளிகள்)

வினா 5: படத்திற்குரிய சொல்லை கண்டுபிடித்து எழுதுக.

**வீடு பட்டம் மரம் பூ சூரியன்**

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |

(10 புள்ளிகள்)

வினா 6: கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை தெரிவு செய்து எழுதுக.

1. இந்த ________ எங்கள் வீடு.

2. இனிமையான ___________________ வீடு.

3. ___________________ சூழல் மிக்க வீடு.

4. சுகமாய் _____________ ஏற்ற வீடு.

5. தங்கமான ________________ வீடு.

6. தங்க ___________________ சிறிய வீடு.

7. உங்கள் _____________ எப்படியோ?

8. உரைத்தால் ______________ மகிழ்ந்திடுவேன்.

(16 புள்ளிகள்)

**சொந்த வாழ வீடு சுத்தம்**

**நல்ல நானும் எங்கள் வீடு**

வினா 7: படம் வரைந்து நிறம் தீட்டுக.

1. மஞ்சள் மாம்பழம்
2. பச்சை இலை
3. கறுப்புக் காகம்
4. சிவப்புத் தொப்பி
5. நீலக் கப்பல்
6. பல வர்ண வண்ணத்துப் பூச்சி

(12 புள்ளிகள்)

| | |
|---|---|
| | |
| | |
| | |

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

அரையாண்டுப் பரீட்சை ஆண்டு இரண்டு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி நி.தயாளன் திகதி:- 14-06-2008

பெயர்:

வினா 1: பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 3 வசனம் எழுதுக.

**1. நான் 2. எனது குடும்பம் 3. அன்னையர் தினம் 4. உடல் உறுப்புக்கள்**

1.

2.

3.

(15 புள்ளிகள்)

வினா 2: சரியான ஒழுங்கில் இலக்கமிடுக.

| | |
|---|---|
| | "அம்மா போய் வருகிறேன்" என்றான் |
| | இருவரும் சேர்ந்து சென்றார்கள் |
| | கண்ணன் பையை எடுத்தான் |
| | வழியிலே அமலன் வந்தான் |
| | அதைத் தோளிலே மாட்டினான் |

(10 புள்ளிகள்)

வினா 3: பின்வரும் எழுத்துக்களிலிருந்து பத்துச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| கா | ளி | ண் | இ | டி |
| பு | மா | பா | கு | ப |
| லை | ட் | வா | ம் | ட |

| | |
|---|---|
| 1. | 6. |
| 2. | 7. |
| 3. | 8. |
| 4. | 9. |
| 5. | 10. |

(10 புள்ளிகள்)

வினா 4: உறவுமுறைகளை எழுதுக.

1. அம்மாவின் தம்பி ______________________________.
2. உமது இளைய சகோதரன் ______________________________.
3. உமது தந்தை ______________________________.
4. உமது தாயார் ______________________________.
5. அம்மாவின் தங்கை ______________________________.
6. அப்பாவின் தங்கை ______________________________.
7. அப்பாவின் தம்பி ______________________________.
8. அம்மாவின் அம்மா ______________________________.
9. அப்பாவின் அப்பா ______________________________.
10. உமது மூத்தசகோதரி ______________________________.

(10 புள்ளிகள்)

வினா 5: பொருத்தமான சொல்லைக்கொண்டு இடைவெளியை நிரப்புங்கள்.

**விளையாடு குடி சாப்பிட்டேன் சீவு மணி**

1. வாணி பால் ____________________________.
2. உமா தலை ____________________________.
3. இப்பொழுது ____________________________என்ன?
4. கண்ணா பந்து ____________________________.
5. நான் தோசை ____________________________.

(10 புள்ளிகள்)

வினா 6: சரியான நிறங்களை எழுதுக.

**பச்சை ஊதா சிவப்பு மஞ்சள் வெள்ளை**

1. பாலின் நிறம் ____________________________.
2. தோடம்பழத்தின் நிறம் ________________________.
3. இரத்தத்தின் நிறம் __________________________.
4. கத்தரிக்காயின் நிறம் ________________________.
5. இலையின் நிறம் ____________________________.

(5 புள்ளிகள்)

வினா 7: சோடி சேர்க்கவும்.

| | |
|---|---|
| ➢ ஏழு | ➢ காட்சி |
| ➢ தொலைக் | ➢ பேசி |
| ➢ கணித | ➢ மணி |
| ➢ தொலை | ➢ சாப்பாடு |
| ➢ இரவுச் | ➢ பாடம் |

(5 புள்ளிகள்)

வினா 8: பின்வரும் ஆத்திசூடி வரிகளை முடிக்கவும்.

**விளம்பேல்      விரும்பு      கரவேல்      சினம்      விலக்கேல்**

1. ஆறுவது ______________________________.
2. ஈவது ______________________________.
3. அறம் செய ______________________________.
4. இயல்வது ______________________________.
5. உடையது ______________________________.

(5 புள்ளிகள்)

வினா 9: வசனமாக ஒழுங்கு படுத்துக.

1. அணிந்தாள் / சீருடை / வாணி

______________________________________________________________.

2. வந்தாள் / சாந்தி / வழியிலே

______________________________________________________________.

3. அனுப்பினார் / முத்தமிட்டு / இருவரையும் / அம்மா

______________________________________________________________.

4. அமலன் / என்றான் / "சரி அக்கா"

______________________________________________________________.

5. வீட்டில் / எங்கள் / அப்பம் / இன்று

______________________________________________________________.

(10 புள்ளிகள்)

வினா 10: இவை என்ன தெரியுமா? ஒவ்வொன்றைப்பற்றியும் ஒரு சிறு வசனம் எழுதுக.

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

P.O.Box 4019, Homebush NSW 2140

அரையாண்டுப் பரீட்சை ஆண்டு மூன்று நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி செ.ஜெயமனோகர் திகதி:- 14-06-2008

பெயர்:-

1. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

நந்தன் ஒருநாள் கடலுக்கு மீன் பிடிக்கப் போனான். கையில் ஒரு வலையைக் கொண்டு சென்றான். வலையை தூக்கி கடலில் வீசினான். வலையில் நிறைய மீன்கள் வந்து சிக்கின. அதில் ஒரு மீன்மங்கையும் அகப்பட்டுக் கொண்டாள். அவள் நந்தனைப் பார்த்து அழுதாள். ‘‘ஐயா! என்னை விட்டுவிடுங்கள் நான் உங்களுக்கு எந்நாளும் நன்றியாக இருப்பேன்’’ என்றாள். நந்தன் அந்த மீன்மங்கையை எடுத்துக் கடலில் போட்டுவிட்டான்.

A. நந்தன் எங்கு சென்றான்?

B. நந்தன் கையில் என்ன கொண்டு சென்றான்?

C. நந்தனின் வலையில் மீன்களுடன் சேர்ந்து அகப்பட்டுக் கொண்டது யார்?

D. மீன்மங்கை நந்தனிடம் என்ன கேட்டாள்?

E. நந்தன் மீன்மங்கையை என்ன செய்தான்?

(20 புள்ளிகள்)

2. தொடர்பு படுத்துங்கள்

| | |
|---|---|
| தமிழர் விளையாட்டுக்கள் | காண்டா மிருகம் |
| தொலைபேசி | இயல், இசை, நாடகம் |
| அழிவை எதிர்நோக்கும் மிருகம் | ஆசிரியர் |
| முத்தமிழ் | போர்த்தேங்காய் , கிளித்தட்டு, கிட்டிப்புள் |
| கல்வி கற்பிப்பவர் | மணி |

(10 புள்ளிகள்)

**3. தரப்பட்ட சொற்களைக் கொண்டு கீறிட்ட இடங்களை நிரப்புக.**

**பருவகாலங்கள், மச்சாள், பாரதியார், பண்ணை, ஓவியர்**

A. எனது அம்மாவின் அண்ணண் மகள் ____________________

B. அவுஸ்திரேலியாவில் நான்கு ____________________ உண்டு.

C. சித்திரம் வரைபவரை ____________________ என அழைப்பார்கள்.

D. மாடு, ஆடு, கோழி வளர்க்கும் இடங்களை ____________________ என அழைப்பார்கள்.

E. ____________________தமிழ் மொழி வாழ்த்தைப் பாடினார்.

(10 புள்ளிகள்)

**4. சரியான சொல்லை கீறிட்ட இடத்தில் நிரப்புக.**

A. நேற்று முழுவதும் மழை ______________________ (பெய்)

B. நான் இப்போது பரீட்சை ______________________ (எழுது)

C. எமது கலைவிழா சிறப்பாக நடந்து ______________________ (முடி)

D. அவர்கள் அடுத்தமாதம் ஊருக்குச் ______________________ (செல்)

E. நாங்கள் சென்ற கிழமை பூங்காவில் ______________________ (விளையாடு)

(10 புள்ளிகள்)

**5. படிவத்தை நிரப்புக:**

| **மாணவர் சுயவிபரப் படிவம் (தமிழ்ப் பாடசாலை)** | |
|---|---|
| மாணவர் பெயர்<br>முதல் எழுத்துக்களுடன் | |
| | |
| தொலைபேசி இலக்கம் | |
| பிறந்த திகதி | |
| வயது | |
| கல்விகற்கும் பாடசாலை | |
| தந்தையார் பெயர் | |
| தாயார் பெயர் | |
| பொழுதுபோக்குகள் | |
| | |
| | |

(20 புள்ளிகள்)

**6. சொல்லினுள் உள்ள சொற்களைக் கண்டுபிடித்து எழுதவும்.**

A. விடுமுறைநாள் ________________/ __________________/ ______________

B. கோயில்கள் ________________/ __________________/ ________________

C. கலைவிழா _______________/ __________________/ ________________

D. படுக்கையறை ______________/ __________________/ __________________

E. இரும்புப்பாதை _____________/ __________________/ __________________

(15 புள்ளிகள்)

**7. ஒவ்வொன்றைப் பற்றியும் இருவசனங்கள் எழுதுக**

A. எனது குடும்பம்

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

(5 புள்ளிகள்)

B. எனது பாடசாலை

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

(5 புள்ளிகள்)

C. எனது விடுமுறை நாட்களில் நான் செய்தவை

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

(5 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

அரையாண்டுப் பரீட்சை ஆண்டு ஆறு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திரு ச.தேவராசா திகதி:- 14-06-2008

**பெயர்:-**

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

1. கீழே உள்ள சொற்களைப் பயன்படுத்தி கோடிட்ட இடங்களை நிரப்புக

**ஆறாம் வகுப்பில், ஊர்மக்களின், வீட்டுப்பாடங்களை, பண்போடு, பாராட்டைப், மாணவன், அன்பு, தங்கையுடனும், விளங்கினான், கவிதா**

ஒரு ஊரில் குமரன் என்ற சிறுவன் தனது பெற்றோருடனும் ____________________ வாழ்ந்து வந்தான். அவனுடைய தங்கையின் பெயர் ______________. ஊரில் உள்ள பாடசாலையில் __________________________ கல்வி கற்கும் அவன் ஆசிரியர்களின் புத்திமதிகளைக் கேட்டு அதன் படி நடந்து சிறந்த ______________ என்ற விருதைப் பெற்றான். படிப்பில் மட்டுமல்லாது விளையாட்டிலும் திறமை மிக்கவனாக அவன் __________________. ஓட்டப் பந்தயத்தில் முதலாவதாக வந்து அனைவரதும் __________________________ பெற்றான். வீட்டில் பெற்றோரின் சொல் கேட்டு நடந்து நல்ல பிள்ளை என்ற பெயரையும் பெற்றான். ______________________ தவறாது செய்தான். ஓய்வு நேரங்களில் தாய் தந்தையருக்கு உதவி செய்தான். தங்கை கவிதாவின் மீது மிகுந்த ______________ செலுத்தினான். உறவினர்களுடனும் பெரியவர்களுடனும் ______________________ பழகினான். அவனுடைய நல்லொழுக்கம் நல்ல பழக்கவழக்கம் என்பவற்றின் காரணமாக ____________________________ மதிப்பைப் பெற்றான். நீங்களும் குமரனைப் போல நல்லவனாக வல்லவனாக வாழ்ந்து எல்லோரினதும் மதிப்பைப் பெறல் வேண்டும்.

(20 புள்ளிகள்)

2. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நாம் தமிழர் நமது தாய் மொழி தமிழ். அவுஸ்திரேலியா போன்ற ஆங்கிலம் பேசும் நாடுகளில் வாழ்ந்து கொண்டும் நாம் தமிழ் மெழியைப் படிக்கின்றோம். அதனால் நாங்கள் பெருமை கொள்ளலாம். ஏனென்றால் தமிழ் பழமை வாய்ந்த மொழி. இலக்கணம் இலக்கியம் என்பவற்றைக் கொண்ட பூரணத்துவமான மொழி. எண்பது மில்லியனுக்கு மேற்பட்ட மக்களால் பேசப்படுகின்ற மொழி.

"தமிழுக்கு அமுதென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று

பாவேந்தர் பாரதிதாசன் பாடினார். தமிழ் மொழி அமுதம் போல இனிமையானது. அது எங்கள் உயிருக்கு சமனானது என்பது இப்பாடலின் கருத்தாகும்.

முற்காலத்தில் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்கள் தமிழ் நாட்டை ஆட்சி செய்தனர். இவர்கள் முறையே அம்பும் வில்லும், புலி, மீன் ஆகிய கொடிகளுடன் ஆட்சி செய்தனர். பத்தாயிரம் வருடங்களுக்கு முன் இராஜ ராஜ சோழன், இராஜேந்திர சோழன் ஆகிய சோழ மன்னர்கள் இந்தியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றியதோடு மட்டுமல்லாது இந்தோனேசியா போன்ற நாடுகளையும் கைப்பற்றி ஆட்சி செய்தனர். இன்றும் இந்தோனேசியாவின் பாலித்தீவில் இந்துசமயத்தை மக்கள் பின்பற்றுவதற்கு இவர்களின் ஆட்சியே காரணமாகும்.

இலங்கை முழுவதையும் ஒருகாலத்தில் எல்லாளன் என்ற தமிழ் மன்னன் நாற்பத்தினான்கு வருடங்கள் ஆட்சி செய்தான். யாழ்ப்பாண இராட்சியத்தை சங்கிலியன் என்ற வீரம் மிக்க தமிழ் அரசன் ஆட்சி செய்தான். வன்னி இராட்சியத்தை பண்டாரவன்னியன் என்ற வீரத் தமிழ் மன்னன் ஆட்சி செய்தான்.

A. தமிழ் மொழி எவ்வளவு மக்களால் பேசப்படுகின்றது?

________________________________________

B. பாரதிதாசன் தமிழ் எப்படிப்பட்டது என்று பாடியுள்ளார்?

________________________________________

________________________________________

C. மூவேந்தர் யார்? அவர்களின் கொடிகள் எவை?

________________________________________

________________________________________

________________________________________

D. இந்தோனேசியாவின் பாலித் தீவிலுள்ள மக்கள் இந்துக்களாக இருப்பதற்குக் காரணம் என்ன?

___

___

___

E. இலங்கையில் ஆட்சி செய்த மூன்று தமிழ் அரசர்களை எழுதுக.

___

___

___

(20 புள்ளிகள்)

3. அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொல்லுடன் ''ஐ'' அல்லது ''கு'' உருபைச் சேர்த்து கோட்டில் எழுதுக.

பிரியா கடந்த ஒருவாரமாகப் பாடசாலைக்கு விரவில்லை. அவள் ____________ (பாடசாலை) வராததால் தோழிகள் மிகவும் கவலை அடைந்தனர். பிரியா பாடசாலைக்கு வராத ____________ (காரணம்) தமது ஆசிரியரிடம் கேட்டனர்.

பிரியாவின் வீடு நெருப்புப் பிடித்து அழிந்துவிட்டதாம். ____________ (நெருப்பு) அவளுடைய புத்தகங்களும் இரையாயின. அதனால் அவள் பாடசாலைக்கு வரத் தயங்குகிறாள் என்ற உண்மை ____________ (ஆசிரியர்) அன்றுதான் தெரிய வந்ததாம்.

தங்கள் வகுப்புத் ____________ (தோழி) கட்டாயம் உதவி செய்ய வேண்டும் என்று மாணவர்கள் முடிவு செய்தனர். தலைமை ஆசிரியரிடம் தங்களின் ____________ (யோசனை) கூறினர். அவரும் அதற்குச் சம்மதித்தார்.

மறுநாளே மாணவிகள் செயலில் இறங்கினர் அவர்கள் சில ______________________ (உண்டியல்கள்) தயாரித்தனர். ஒவ்வொருவரும் தங்களிடம் இருந்த ________________ (பணம்) உண்டியலில் போட்டனர். சிலர் மற்ற வகுப்புகளுக்குச் சென்று பணம் வசூலித்தனர். மாணவிகள் தம்மால் இயன்ற நன்கொடை கொடுத்தனர். மாணவிகள் தாம் சேகரித்த நிதியை தலைமை ஆசிரியரிடம் கொடுத்தனர். தலைமை ஆசிரியரும் சில மாணவிகளும் அன்று மாலை பிரியாவின் __________ (வீடு) சென்றனர். பிரியாவின் தந்தையிடம் பணத்தைக் கொடுத்தனர். ______________ (பிரியா) ஆறுதலும் கூறினர்.

(20 புள்ளிகள்)

4. இலங்கை அல்லது இந்தியாவிலுள்ள உங்கள் உறவினர் ஒருவருக்கு சிட்னியிலுள்ள சிறந்த இடத்தைப்பற்றிக் குறிப்பிட்டு எதிர்வரும் கோடை விடுமுறையில் அவரை இங்கே வருமாறு ஒரு கடிதம் எழுதுக. கடிதம் 50 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(20 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 15 வசனம் எழுதுக.

A. எனது விடுமுறை

B. நான் விரும்பும் பண்டிகை (தைப்பொங்கல், தீபாவளி, நத்தார்)

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**

P.O.Box 4019, Homebush NSW 2140

---

அரையாண்டுப் பரீட்சை ஆண்டு ஏழு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி சா.விஜயநாதன் திகதி:- 14-06-2008

பெயர்:- ______________________________________________________.

1. **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**
உடல் நோயால் தவித்த ஒருவன் மருத்துவசாலைக்குச் சென்று உள்ளே அருந்த ஒரு மருத்தும் வெளியே பூச மற்றொரு மருந்தும் இரண்டு புட்டிகளில் வாங்கிக் கொண்டு வந்தான். வெளியே பூசும் மருந்துள்ள புட்டி மீது 'நஞ்சு' என்ற சொல் சிவப்பு எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. வீட்டிற்கு வந்ததும் உள்ளே அருந்த வேண்டிய மருந்தை அருந்தி விட்டு, உடலில் பூசவேண்டிய மருந்தை உடலில் பூசிக் கொண்டு வெளியே சென்றான். அப்போது அவனுடைய மைத்துனன் வேடிக்கை செய்வதற்காக வெளிப்பூச்சு மருந்துப் புட்டி மீது ஒட்டப்பட்டிருந்த 'நஞ்சு' என்று எழுத்துள்ள தாளைப் பிய்த்து, உள்ளே அருந்துவதற்கான மருந்துள்ள புட்டியில் ஒட்டி விட்டு, ஒன்றும் தெரியாதவன் போல் இருந்து விட்டான். வெளியே சென்று வீடு திரும்பிய நோயாளி மருந்துப் புட்டியைப் பார்த்ததும் அவனுடைய அறிவு மயங்கியது. மனமும் மருண்டது. 'ஐயோ நஞ்சைப் சாப்பிட்டு விட்டேனே! நான் என்ன செய்வேன்? என் உடலெல்லாம் பற்றி எரிகிறதே! நான் இவ்வுலகில் இருப்பது இன்னும் எத்தனை மணிநேரமோ என்று அலறித் துடித்துக் கீழே வீழ்ந்து இங்கும் அங்கும் புரண்டான்.

(அ) உடல் நோயால் வருந்துவோர் யாது செய்வர்?

........................................................................................

(ஆ) உள்ளே அருந்தக் கூடாத மருந்துகளுக்கு அவற்றை வினியோகிப்போர் என்ன செய்கின்றார்கள்?

........................................................................................

(இ) குறித்த நோயாளி வீட்டிற்கு யார் வந்தார்?

........................................................................................

(ஈ) அவர் செய்த வேடிக்கை என்ன?

........................................................................................

(உ) வேடிக்கையின் காரணமாக நோயாளியிடம் ஏற்பட்ட செயற்பாடுகள் எவை?

........................................................................................

(15 புள்ளிகள்)

**2. சொற்களை முறையாக அமைத்து சரியான வாக்கியமாக எழுதுக**

(அ) நாடு, நமது, அவுஸ்திரேலியா

…………………………………………………………..

(ஆ) அழகான, அது, நாடு, ஒரு

………………………………………………………….

(இ) பல, வாழ்கிறார்கள், இங்கு, இனமக்கள்

…………………………………………………………..

(ஈ) ஒற்றுமையுடனும் அவர்கள், வாழ்கிறார்கள், மகிழ்ச்சியுடனும்

…………………………………………………………………….

(உ) அடுக்குமாடி, பலர், வசிக்கிறார்கள், வீடுகளில்

……………………………………………………………………..

(ஊ) உள்ளன, அவுஸ்த்திரேலியாவில், தொழிற்சாலைகள், பல

……………………………………………………………………..

(எ) தொழிலாளர்கள், அவற்றில், செய்கிறார்கள், திறைமையாக, வேலை

……………………………………………………………………………

(21 புள்ளிகள்)

**3. பின்வரும் கெரற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக**

**(கடைகள், கடைக்கு, கோபித்து, மழை, குடை, பொருள்களை, நனைத்து)**

நானும் என் தம்பியும் ________________ சென்றோம். அப்போது ________________ தூற ஆரம்பித்தது. ஆயினும் நாங்கள் ____________ எடுத்துப் போகவில்லை. எனவே இருவரும் ________________ கொண்டே சென்றோம். ________________ திறக்கப்படாமல் இருந்தன. அதனால் சற்றுப் பொறுமையாக இருந்து ________________ வாங்கிக் கொண்டு வீடு திரும்பினோம். நாங்கள் நனைந்து இருப்பதைப் பார்த்தவுடன் தாயார் எங்களை ________________ கொண்டார்.

(14 புள்ளிகள்)

**4. பின்வரும் வசனங்களை அடைப்புக்குறிக்குள் கேட்கப்பட்டிக்கும் காலங்களில் எழுதுக.**

(அ) நான் கதைப் புத்தகம் வாசித்தேன். (எதிர்காலம்)

……………………………………………………………………………

(ஆ) நீதிபதி ஆசனத்தில் அமருகிறார். (இறந்தகாலம்)

……………………………………………………………………………

(இ) நாங்கள் மாலையில் உடற்பயிற்சி செய்தோம். (நிகழ்காலம்)

……………………………………………………………………………

(ஈ) பெண்கள் தொழிற்சாலையில் வேலை செய்தார்கள். (நிகழ்காலம்)

……………………………………………………………………………

(10 புள்ளிகள்)

5. **பின்வரும் சொற்களை வைத்து வசனம் எழுதுக.**

(அ) உதவி –

……………………………………………………………………………..

(ஆ) தமிழ் தொழி –

……………………………………………………………………………..

(இ) கலைவிழா –

……………………………………………………………………………..

(ஈ) கலாச்சாரம் -

……………………………………………………………………………..

(உ) பத்திரிகை –

……………………………………………………………………………

(10 புள்ளிகள்)

6. **கீழேயுள்ள இருவாக்கியங்களை ஒரே வாக்கியமாக எழுதுக.**

(அ) கமலா பாட்டுப் பாடுகிறாள்
விமலா பாட்டுப் பாடுகிறாள்

…………………………………………………………………………...

(ஆ) நான் புத்தகத்தை எடுத்தேன்
நான் பாடம் படித்தேன்

…………………………………………………………………………..

(இ) நாங்கள் பந்து விளையாடிக் கொண்டிருந்தோம்.
நாங்கள் விளையாட்டுத்திடலில் முயலை பார்த்தோம்

…………………………………………………………………………...

(ஈ) ஆசிரியர் வகுப்புக்கு வந்தார்
ஆசிரியா் படிப்பித்தார்

…………………………………………………………………………

(உ) அவன் பல் துலக்கினான்
ஆவன் முகம் கழுவினான்

…………………………………………………………………………..

(10 புள்ளிகள்)

7. **பின்வருவனவற்றள் ஒன்றைப்பற்றி கட்டுரை எழுதுக.**

(அ) எனது பாடசாலை

(ஆ) உமது பாடசாலையில் நடை பெற்ற கலைவிழா

(இ) உமது பிறந்தநாள் கொண்டாட்டம்

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**

P.O.Box 4019, Homebush NSW 2140

அரையாண்டுப் பரீட்சை ஆண்டு எட்டு நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி ர.குலராஜா திகதி:- 14-06-2008

பெயர்:- ______________________________.

**1. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு பூரணமான பதிலளிக்கவும்.**

பூமியின் முக்காற்பாகம் கடல். மீதமுள்ள காற்பகுதிதான் நிலமாக இருக்கிறது. நாம் அந்நிலப்பகுதியில் வசிக்கிறோம், நிலத்தை சூழ இருப்பது கடலே. அதனால்தான் ''கடல் சூழ்ந்த உலகம்'' என்று புலவர்கள் பாடினார்கள்.

கடல் மட்டத்தைவிட உயரமான பகுதிகளில் நாம் வாழ்கின்றோம். நிலத்தின் மீது பல மேடுகளும் உயரமான மலைகளும் இருக்கின்றன. இல்லாவிட்டால் கடல் நீர் பெருகி நிலத்தை மூடிவிடும், அவ்வளவு தண்ணீர் கடலில் இருக்கிறது.

கடல் நமக்குப் பல வழிகளில் உதவுகிறது, கடலில் இருந்து நாம் பெறும் பயன்கள் எண்ணிலடங்கா, நாம் உயிர்வாழ மழைநீர் இன்றியமையாதது. நீர் இல்லாமல் விலங்குகள், தாவரங்கள் போன்ற உயிரினங்கள் எவையும் உயிர்வாழ முடியாது.

இந்த மழை எப்படிப் பெய்கிறது? கடல் நீர் சூரியவெப்பத்தால் ஆவியாகி மேலே சென்று மேகங்களாகும், குளிர்காற்று அம்மேகங்கள் மீது வீசும்போது அவை மழைத்துளிகளாக மீண்டும் பூமியில் விழுகின்றன. உலகுக்கு உணவு அளிப்பது மழை. அம்மழை பெய்ய உதவுவது கடல்

கடல் நீரில் அதிக உப்பு காணப்படுகிறது. கடல் நீரில் எவ்வளவு உப்பு இருக்கிறது என்று தெரியுமா? உலகம் முழுவதும் ஐந்நூறு அடி உயரம் பரப்புவதற்கு தேவையான உப்பு கடலில் இருக்கிறது. கடலோரங்களில் பாத்திகட்டி உப்பு எடுக்கின்றார்கள். இவை தவிர மேலும் பல வழிகளில் கடல் நமக்குப் பயன்படுகிறது. கடல் இறைவனால் தரப்பட்ட இயற்கை வளமாகும்.

1. புலவர்கள் உலகத்தை ஏன் கடல் சூழ்ந்த உலகம் என்று பாடினார்கள்?

_______________________________________

_______________________________________

2. மழை பெய்வதற்கு கடல் எவ்வாறு உதவுகிறது?

______________________________________________

______________________________________________

3. மழை பெய்யாவிட்டால் என்ன நடக்கும்?

______________________________________________

______________________________________________

4. கடல் நீரில் இருந்து எப்படி உப்பு எடுக்கிறார்கள்?

______________________________________________

______________________________________________

5. கடல் பெருக்கெடுப்பதால் எப்படிப்பட்ட அழிவுகள் ஏற்படும் என்று நீர் கருதுகிறீர்?

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்)

6. பொருள் தருக.

1. எண்ணிலடங்காது

---------------------------------------------------------------------------

2. இன்றியமையாதது.

---------------------------------------------------------------------------

3. விலங்குகள்.

---------------------------------------------------------------------------

4. வெப்பத்தினால்.

---------------------------------------------------------------------------

5. மீண்டும்.

---------------------------------------------------------------------------

(5 புள்ளிகள்)

**2.** அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொல்லுடன் ஏற்ற வேற்றுமை உருபைச் சேர்த்துக் கோட்டில் எழுதுக.

1. ஒரு ____________________ குடிசை ஒன்று இருந்தது. (**காடு**)
2. அந்தக் _________________ வேடன் ஒருவன் வாழ்ந்து வந்தான் (**குடிசை**)
3. அவன் __________________ மிருகங்களை சுட்டு வீழ்த்துவதில் வல்லவன் (**துப்பாக்கி**)
4. ஒருநாள் __________________ நகரத்திற்குச் சென்றுவர விருப்பம் ஏற்பட்டது. (**வேடன்**)
5. அவன் ______________________ இருந்து வெளியேறி நடந்தான். (**குடிசை**)
6. வழியில் வேடன் ஒரு _______________________ சந்தித்தான். (**மனிதன்**)
7. அம்மனிதன் _________________ வழி தெரியாமற் திண்டாடிக் கொண்டிருந்தான் (**காடு**)
8. அந்த மனிதன் _____________________ ஆங்கிலத்திற் பேசினான் (**வேடன்**)
9. அவன் பேச்சை _______________ புரிந்துகொள்ள முடியவில்லை (**வேடன்**)
10. பின்னர் அந்த மனிதன் _________________________ பேசினான் (**தமிழ்**)
11. அதைக்கேட்டதும் வேடன் _________________ அந்த மனிதனுடன் உரையாடினான் (**மகிழ்ச்சி**)
12. பிறகு இருவரும் _________________ நோக்கி நடந்து சென்றனர் (**நகரம்**)

(12 புள்ளிகள்)

**3.** பின்வரும் சொற்களுக்கு இருவெறு பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.

1. மடி

   ------------------------------------------------------------------------------------------------------

   ------------------------------------------------------------------------------------------------------

2. படி.

   ---------------------------------------------------------------------------------------------

   ---------------------------------------------------------------------------------------------

3. ஊர்.

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

4. கல்.

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

5. ஆடு.

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

(15 புள்ளிகள்)

**4.** பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக

1. (இழை, இறை) வணக்கம் மனதிற்கு அமைதி அளிக்கிறது.
2. உலகில் (வலம், வளம்) நிறைந்த நாடுகளில் நம் நாடும் ஒன்று.
3. தேன் மொழி நடனக் (கலையில், களையில்)சிறந்து விளங்கினாள்.
4. மல்லிகை மலருக்கு நல்ல (மனம், மணம்) உண்டு.
5. கடற் (கறை, கரை) ஓரத்தில் சிறுவர்கள் விளையாடினார்கள்.

(5 புள்ளிகள்)

**5.** பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புங்கள்.

1. ------------- வாங்கிய வில்லின் ----------------- அறுந்து விட்டது. (நான், நாண்)
2. -------------- கடலுக்குச் சென்ற ----------------- திரும்பவில்லை. (ஆள், ஆழ்)
3. உடற் ------------- இல்லாதவர்கள் ------------- சாப்பிடுதல் நன்று.(பழம், பலம்)
4. பொழுதை உல்லாசமாகக் -------த்த மக்கள் ------ப்புடன் திரும்பினர்.(கழி, களி)
5. நீ ---------- உணவை உரிய நேரத்தில் ------------------ (உன், உண்)

(10 புள்ளிகள்)

**6.** கீழ் வரும் சம்பவத்தை உமது சொந்தக் கற்பனையில் 60 சொற்களுக்கு குறையாமல் எழுதுங்கள்.

இலங்கையில் இருந்து அவுஸ்ரேலியாவிற்கு உல்லாசப் பயணி ஒருவர் வந்தார். அவர் சிட்னியில் சில இடங்களைப் பார்த்துவிட்டு ஒரு புகையிரத நிலையத்தில் வண்டிக்காகக் காத்து நின்றார். அவருக்கு ஒரு சக பாடியுடன் இடங்களைப் பார்த்தால் அதிகம் மகிழ்ச்சியாக இருக்கும் என்று மனதில் ஒரு விருப்பம். இந்த நேரத்தில் எதிர்பாராத விதமாக இலங்கையில் 20 வருடங்களுக்குமுன் தன்னுடன் படித்த ஒரு நண்பனைச் சந்தித்தார். இருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்தி கட்டியணைத்து மகிழ்ச்சியுடன் அருகில் இருந்த ஒரு சிற்றுண்டிக் கடைக்குச் சென்றனர்.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

(15 புள்ளிகள்)

**7.** கீழ்வரும் சொற்களை சேர்த்து எழுதுங்கள்.

1. ஓர் + அரசன் = ____________________
2. பாடல் + ஆசிரியர் = ____________________
3. கால் + அணி = ____________________
4. தாய் + அன்பு = ____________________
5. உயிர் + எழுத்து = ____________________

(5 புள்ளிகள்)

**8.** கீழ்வரும் சொற்களை பிரித்து எழுதுங்கள்.

1. மூன்றடி = ____________________

2. பேச்சாற்றல் = ____________________

3. பண்புள்ளவர் = ____________________

4. மதிப்பெண் = ____________________

5. வழக்கறிஞர் = ____________________

(5 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றைப் பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுங்கள்.

1. புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்களும், தமிழ்வளர்ச்சியும்.

2. முறிந்த குடை அல்லது உடைந்த கைக்கடிகாரம் ஒன்றின் சுயசரிதை.

3. எமது பாடசாலைக் கலைவிழா பற்றி இலங்கையில் இருக்கும் நண்பனுக்கு ஓர் கடிதம்.

4. எனது வாழ்வில் மறக்க முடியாத ஒரு சம்பவம்.

(18 புள்ளிகள்)

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140

அரையாண்டுப் பரீட்சை ஆண்டு பத்து நேரம்: 2 மணித்தியாலங்கள்
ஆசிரியர்: திருமதி த.சந்திரதாஸ் திகதி:- 14-06-2008

**பெயர்:-**

வாசித்து விடையளித்தல் _ Reading and responding

1. பின்வரும் வினாப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு ஆங்கிலத்தில் பதிலளிக்கவும்.

Read the text then answer the questions in English.

அபரிஜினி (Aborigine) என்று அழைக்கப்படும் அவுஸ்திரேலியாவின் பூர்வீக குடிமக்கள் உலகின் மிகத் தொன்மையான ஆதிப்பழங் குடியினங்களில் ஒன்றாகும். அபரிஜினி என்ற சொல்லுக்கு அர்த்தம் ஆதியிலிருந்தே அல்லது தொடக்கத்திலிருந்தே இங்கு வாழ்கின்ற மக்கள் என்பதாகும். ஏறத்தாள நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அவுஸ்திரேலியாக் கண்டத்தில் வாழ்ந்து வருகின்ற அபரிஜினல் பழங்குடி மக்கள் இரண்டாவது பனிநகர்வுக் காலத்தின் போது தென்கிழக்கு ஆசியக் கண்டத்தில் இருந்து வந்தவர்கள் என்று கருதப்படுகின்றது.

அபரிஜினி இனத்துக்குள்ளே ஐந்நூறுக்கு மேற்பட்ட தனித்துவமான பிரிவுகள் உண்டு. எனினும் இவ்வளவு பிரிவுகளையும் ஒன்றிணைக்கும் வகையில்தான் அவர்களுடைய பண்பாடு மற்றும் ஆன்மீக வாழ்வுமுறை அமைந்துள்ளது. அவர்களின் தொன்மையான வாழ்க்கை குறித்து ஆவணங்கள் இல்லை என்றாலும் தொல்பொருள் ஆராச்சிகள் ஊடாகவும், பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து மரபுவழிச் சடங்குகள், வாழ்க்கை முறைகள் ஊடாகவும் இந்த ஆதிப்பழங்குடியினர் பெருமைபற்றி அறியக் கூடியதாக இருக்கின்றது.

1788ம் ஆண்டு பிரித்தானியாவில் இருந்து கப்பல் கப்பலாகச் சிறைக்கைதிகளைப் பிரித்தானிய அரசு அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பிவைத்தது. அன்றிலிருந்து இந்த ஆதிப் பழங்குடியினரின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளானது.

A. அபரிஜினி (Aborigine) என்ற சொல்லின் பொருள் யாது?

________________________________________

(2 புள்ளிகள்)

B. ஏறத்தாள எவ்வளவு காலமாக இந்த மக்கள் அவுஸ்திரேலியாக் கண்டத்தில் வாழ்ந்து வருகிறார்கள்?

________________________________________

(2 புள்ளிகள்)

C. அபரிஜினி மக்கள் அவுத்திரேலியாவுக்கு எப்படி வந்து சேர்ந்தார்கள் என்பதைச் சுருக்கமாக எழுதுக.

________________________________________

________________________________________

________________________________________

(3 புள்ளிகள்)

D. “இந்த மக்களது கலாசாரம் பற்றி எழுத்துரீதியான ஆவணங்கள் இல்லை என்றாலும் அவர்களுடைய கலாசாரம் வாழ்வுமுறை பற்றி நாம் விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது” இக் கூற்றை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? உமது விடைக்கான காரணத்தைத் தருக.

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

(4 புள்ளிகள்)

E. 1788ம் ஆண்டிற்குப் பின் ஆதிக்குடியினருக்கு என்ன நடந்தது?

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

(2 புள்ளிகள்)

F. “பாதிப்புக்குள்ளானது” என்ற சொல்லின் ஆங்கிலப்பதத்தைத் தருக.

________________________________________________________________

________________________________________________________________

(2 புள்ளிகள்)

2. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள அட்டவணையில் உரைப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருப்பவர் தொடர்பான விபரங்களை நிரப்புக. (10 புள்ளிகள்)

இருபதாம் நூற்றாண்டில் எழுத்து வேள்வியைத் தொடக்கி இந்த நூற்றாண்டிலும் சாதனை படைத்த இணையற்ற பெண்மணியாக இராஜம் கிருஷ்ணனைச் சொல்லலாம். பெண் எழுத்தாளர்கள் காதல் கதைகளும் குடும்பக் கதைகளும் படைத்துக்கொண்டிருந்த காலகட்டத்தில் ஒவ்வொரு நாவலுக்கும் அந்தந்த இடங்களுக்கு நேரடியாக சென்று தகவல் திரட்டி எழுதியவர் இவர். இவருடைய கதைகளில் கற்பனையைவிட ஆய்வுப் பார்வையும் சமுதாய நோக்குமே மேலோங்கி நிற்கும்.
சாகித்திய மண்டல விருது, பாரதிய பாசா விருது, திரு வி க விருது ஆகிய அனைத்து விருதுகளையும் ஒருங்கே பெற்றவர். பெண் என்பவள் ஒரு மனுஷி என்பதையே எழுத்துக்கள் காட்ட வேண்டும், ஏனெனில் எழுத்து என்பது மனித உரிமைகளைத் தேடுதலே என்று கூறும் இராஜம் கிருஷ்ணன் திருச்சி மாவட்டத்தில் 5/11/1925 ஆண்டு பிறந்தார். 38க்கு மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார். இவரது படைப்பில் மணிதநேயமும் பெண்ணியப் பார்வையும் இருக்கும்.

A.

| | |
|---|---|
| பெயர்: | |
| பிறந்த திகதி: | |
| பிறந்த இடம் | |
| பெற்ற விருதுகள் இரண்டு | |
| அவர் விரும்பி ஈடுபட்டதுறை | |
| எழுதிய நாவல்களின் எண்ணிக்கை | |
| எழுதத் தொடங்கிய காலம் | |

B. உரைப்பகுதியில் இருந்து எழுத்தாளரின் எழுத்துகள் பற்றி நீர் விளங்கிக் கொண்ட அம்சங்கள் இரண்டு எழுதுக

3. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மனித வாழ்வில் முதுமைப்பருவம் எப்போது ஆரம்பமாகும் என்று வரையறை செய்வது கடினம். ஆயினும் வருட எண்ணிக்கையை மட்டும் கருத்தில் கொண்டு முதுமையை அளவிடுவதாயின் அறுபது வயதைக் கடந்தவர்கள் எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. ஆயினும் முதுமை வருடங்களின் எண்ணிக்கையை மட்டும் கொண்டு அளவிட முடியாமல் உள்ளது. சிலர் இளமையிலேயே முதுமையின் முத்திரை படிந்தவர்கள் ஆகிவிடுகின்றார்கள். சிலர் முதுமையிலும் இளமையாக இருக்கின்றார்கள்.

மேலும் இன்றைய வாழ்வின் அழுத்தங்கள் இளையதலைமுறையினருக்கு முதியோர்கள் மீது அக்கறையும், ஆதரவும் செலுத்த முடியாத ஓர் நிலையயை ஏற்படுத்துகின்றது. இந்நிலைகள் முதியோர்களிடம் விரக்தியையும் மனநோய்களையும் ஏற்படுத்துகின்றன.

இன்றைய புலம்பெயர்ந்த சமூகத்தில் சில முதியோர்கள் பிள்ளைகளைப் பிரிந்து பாதுகாப்பு நிழலற்று அன்னியர்களின் ஆதரவில் வாழ்கிறார்கள். வேறு சிலர் பழக்கப்பட்ட சுற்றாடலை இழந்தும், பாரம்பரிய கூட்டு சமூக அமைப்பைப் பிரிந்தும் அன்னிய நாடுகளில் கூண்டில் இடப்பட்ட மனிதர்களாக வாழ்கிறார்கள்.

தொகையால் கூடிவரும் முதுமையடைந்தோர் பற்றிய சிந்தனைப்புலன்கள் இன்று விரிவடைந்து முக்கியத்துவம் பெற்றுள்ளன. உலக சுகாதார ஸ்தாபனம் 1996ம் ஆண்டு முதியோர் பற்றிய பிரகடனம் ஒன்றை வெளியிட்டது. "முதியோருக்கு ஒரு சமூகம் அளிக்கும் ஆரோக்கியமான அந்தஸ்தையும் ஆதரவையும் வைத்துத்தான் அந்தச் சமூகத்தின் நாகரீகம் மதிக்கப்படும்" எனக் கூறியுள்ளது.

இதுவரை காலமும் குழந்தைகள் இளம் பராயத்தோருக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் இன்று முதுமைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. முதுமையடையும் மக்களைப் பிரச்சனையாகக் கொள்ளாது அவர்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வாழ்வின் பிரச்சனைக்கு முகம் கொடுக்க கூடியவர்களாக முதியவர்களை ஆக்க வேண்டும், என்ற சிந்தனை வலுப்பெற்று வருவது ஆரோக்கியமானது,

A. இவ்வுரைப் பகுதிக்கு பொருத்தமான தலைப்பு ஒன்று எழுதுக

________________________________________

(2 புள்ளிகள்)

B. முதுமைப் பருவத்தை எப்படி வரையறை செய்யலாம் என்ற உமது சொந்தக் கருத்தை எழுதுக

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(2 புள்ளிகள்)

C. முதியோர்களின் விரக்திக்கும் மனநோய்க்குமான காரணங்கள் எவை?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(3 புள்ளிகள்)

D. உலக சுகாதார ஸ்தாபனம் முதியோர் பற்றிய பிகடனத்தில் கூறிய கருத்து யாது?

(3 புள்ளிகள்)

E. புலம்பெயர் நாடுகளில் முதியோர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி சுருக்கமாக எழுதுக

(5 புள்ளிகள்)

4. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 – 250 சொற்களுக்கு குறையாமல் எழுதுக (தமிழில் எழுதவும்)

A. "இணையத்தின் அகன்ற கைகளில் உலகம் வெறும் எள்ளுருண்டை" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

B. நீர் பார்த்து ரசித்த திரைப்படம் ஒன்றின் விமர்சனம் உமது சமூகப் பத்திரிகை ஒன்றில் பிரசுரிப்பதற்குரிய வடிவத்தில் எழுதுக.

C. நீர் உமது பாடசாலையின் மாணவப் பிரதிநிதித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீர். உமது சக மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உமது பொறுப்பை உணர்ந்து எவ்வாறு செயற்படுவீர் என்பது பற்றியும், உம்மை இந்த பதவிக்கு தெரிவு செய்தவர்களுக்கு நன்றி கூறியும், பாடசாலைக் கூட்டத்தில் நீர் ஆற்ற இருக்கும் உரையினை எழுத்து வடிவத்தில் தருக.

D. முதியோர் வாழ உதவுவோம் என்ற தலைப்பில் ஓர் கட்டுரை எழுதுக.

(20 புள்ளிகள்)